| | |
|---|---|
| | **தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**<br>**Tamil University, Thanjavur** |

# முனைவர்ப் பட்ட நுழைவுத் தேர்வுக்கானஅறிவிப்பு

## TURCET 2020 - Notification Regarding the Entrance Examination

1. **நுழைவுச்சீட்டு (Hall Ticket)**

   தேர்வாளர்கள் நுழைவுச்சீட்டைப் பதிவிறக்கம் செய்து அச்சிட்டுக்கொள்ள வேண்டும். அச்சிட்ட நுழைவுச்சீட்டு, நிழற்படத்துடன்கூடிய அடையாள அட்டையுடன் தேர்வு நடைபெறும் அறைக்கு வர வேண்டும். அச்சிட்ட நுழைவுச்சீட்டு, அடையாள அட்டை இல்லாமல் வருபவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

   Candidates need to download and print the Hall Ticket and bring it along with any of the Photo ID cards mentioned below to the Exam Centres. Candidates without the Printed Hall ticket and Photo ID will not be allowed to write the TURCET.

2. **தேர்வு நடைபெறும் மையங்கள் (Examination Centres)**

   முனைவர்ப் பட்ட நுழைவுத்தேர்வு 28-02-2021 ஞாயிற்றுக்கிழமை, காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை தஞ்சாவூர் மற்றும் சென்னை மையங்களில் நடைபெறும்.

TURCET will be held on 28-02-2021 Sunday from 11.00 AM to 1.00 PM in the Exam Centres at Thanjavur and Chennai.

மையம் 1: தமிழ்ப் பல்கலைக்கழகம், திருச்சி சாலை, ஆட்சியர் அலுவலகம் அருகில், தஞ்சாவூர் 613010.

மையம் 2: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மை சாலை, சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை – 600103.

Centre 1: Tamil University, Trichy Road, Near Thajavur Collectorate, Thanajvur 613010.

Centre 2: International Institute of Tamil Studies, 2nd Main Road, CIT Campus, Taramani, Chennai - 600113.

3. **தகுதியுள்ள மாணவர்கள் பட்டியல் (Eligible Students List )**

நுழைவுத் தேர்வு எழுதுவதற்குத் தகுதியுள்ள மாணவர்களின் இறுதிப் பட்டியல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலைக் கீழ்க்காணும் இணையமுகவரியில் காணலாம்:

The eligible list of candidates who can appear in TURCET has been uploaded and the list can be viewed through the following web-link.

http://zubhatechnologies.com/tu_rsm/index.php?/prePhd/OnlineApplication/eligibleCandidateList/2/1

4. **நுழைவுச் சீட்டைப் பதிவிறக்கம் செய்யும்முறை (How to Download Hall Ticket )**

முனைவர்ப் பட்ட நுழைவுத் தேர்வுக்கான நுழைவுச்சீட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் கீழ்க்காணும் இணைய முகவரிக்குச் சென்று நுழைவுச் சீட்டைப் பதிவிறக்கம் செய்யலாம்.

http://zubhatechnologies.com/tu_rsm/index.php?/prePhd/OnlineApplication/alreadyRegistered/login/2

நுழைவுச்சீட்டைப் பதிவிறக்கம் செய்ய, விண்ணப்பதாரர்கள் மேற்கண்ட நுழைவுத் தேர்வுக்கான இணையதள முகவரிக்குச் சென்று

1) முனைவர்ப் பட்டத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது அளித்த மின்னஞ்சல் முகவரி அல்லது அலைபேசி எண்,
2) பிறந்த நாள்
3) விண்ணப்ப எண்

ஆகிய தகவல்களை உள்ளீடு செய்து Login பட்டனைச் சொடுக்கி, நுழைவுத் தேர்வுக்கான இணையத்தில் நுழைந்து Hall Ticket என்ற பட்டனைச் சொடுக்கி, நுழைவுச்சீட்டைப் பதிவிறக்கம் செய்யலாம்.

நுழைவுச் சீட்டைப் பதிவிறக்குவதில் ஏதேனும் தடைகள் இருந்தால் – 9677905490 என்ற உதவி அலைபேசிக்கு அழைக்கவும் அல்லது tuadmissionsection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்ளவும்.

The Hall ticket for TURCET Exam has been uploaded on the website. Students can download the website through the link given below or they can visit the web page through the link available on the Tamil university's Website.

http://zubhatechnologies.com/tu_rsm/index.php?/prePhd/OnlineApplication/alreadyRegistered/login/2

To Download the Hall Ticket, students have to visit the TURCET webpage through above link and enter

1) The email ID or Phone number given at the time of Registration for TURCET
2) Date of Birth
3) Application Number  and then click Login button

Then click Login button. After entering the TURCET Website, Click on Hall Ticket button to download hall ticket.

If you face any difficulty in Downloading the Hall Ticket, Contact helpline No: 9677905490

Or email to tuadmissionsection@gmail.com

**5. நுழைவுத் தேர்வு எழுதுவதற்கான விதிமுறைகள் (Instructions to Candidates)**

1. விண்ணப்பதாரர் நுழைவுத் தேர்வு அறைக்குத் தேர்வு தொடங்குவதற்கு அரைமணிநேரம் முன்னதாகவே உரிய தேர்வு அறைக்குள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்
2. கைப்பேசி, மின்னணுக் கருவிகள் போன்றவற்றிற்கு தேர்வுக்கூடத்தில் அனுமதி கிடையாது.
3. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஏதேனும் ஓர் அசல் சான்றிதழை வைத்திருக்கவேண்டும் : ஆதார்அட்டை/ ஓட்டுநர்உரிமம்/ கடவுச்சீட்டு.
4. வினாவிற்கான சரியான விடையை உரிய கட்டத்திற்குள் மட்டுமே எழுத வேண்டும். அடித்தல் திருத்தல் இருத்தல் கூடாது.
5. கட்டங்களுக்குள் குறிக்கப்படும் விடைகள் (விடைகளுக்கான எழுத்து) தெளிவான முறையில் அமைந்திருக்க வேண்டும்.
6. விடைகளைக் குறிப்பிட நீல வண்ண பந்துமுனைப் பேனாவை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

7. அளிக்கப்படும் விடைத்தாளில் விண்ணப்பதாரர்கள் விடைகள் அல்லாமல் வேறு குறிப்புக்களை எழுதவோ, கையொப்பமிடவோ கூடாது.
8. விண்ணப்பதாரர் முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனி மனித இடைவெளியையும் கடைபிடிக்க வேண்டும்.

1. Applicants are advised to be in the examination hall 30 minutes before the commencement of entrance examination.
2. Cellphone and other electronic gadgets are not allowed in the Exam Hall.
3. Applicants should carry any one of the following original proofs for their identification: Aadhar card/Driving licence/Passport.
4. Write the best or suitable, correct answer within the box provided against each question number.
5. The answer should be written in clear style without any ambiguity.
6. Use only blue point pen to write suitable answer.
7. Candidates should not write anything or sing in the answer sheet, provided.
8. Candidates should maintain social distance and wear a face mask.

நாள்/Date: 22-02-2021
:

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ.)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
Controller of Examinations (i/c)
Tamil University